Registered as a News Paper பக்கங்கள் 6 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 17 [28 - 2 - 1993] ஞாயிற்றுக்கிழமை ஓசை 10

## காசநோய் பரிசோதனை மருந்துப்பொருள் இல்லை

யாழ்ப்பாணம் மார்புநோய்ச் சிகிச்சைப் பிரிவின் ஆய்வு கூடத்தில் காசநோய் பரிசோதனைக்கான மருந்துப் பொருளுக்கு பெரும்தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் இந்நோய்க்கான பரிசோதனை நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை தோன்றியுள்ளது. தற்போது மந்திகை ஆஸ்பத்திரியிலிருந்து பெறப்பட்ட மருந்துப் பொருள்களை கொண்டே காச நோய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியவருகிறது. இதேவேளை கடந்த (6ஆம் பக்கம் பார்க்க)

# காடுகளில் புலிகளுடன் போரிட புதிய இராணுவப் படைப் பிரிவு

## அடுத்த மாதம் பயிற்சி ஆரம்பம்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடன் கிழக்குமாகாணத்தில் காடுகளில் போரிடவென விசேட படை அணி ஒன்று உருவாக்கப்படவுள்ளதாகவும், இப் படைப்பிரிவிற்கான பயிற்சிகள் மார்ச் மாத ஆரம்பத்தில் தொடங்கவுள்ளதாகவும் படை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் அவர் சிறிலங்கா இராணுவத்திலுள்ள சில படைப் பிரிவுகளில் இருந்து இவ் விசேட படையணிக்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இராணுவம் ஆட்பலத்தை அதிகரிக்கவும், வசதிகளைப் பெருக்கவும், விரிவான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டு வருவதாகவும், இதற்கான நடவடிக்கையில் ஈடுபட விசேட இராணுவ அணியொன்று அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இப்படை அணிக்காக அநுராதபுரம், காலி, கண்டி, கொழும்பு மாவட்டங்களில் இருக்கும் இராணுவ முகாம்களிலிருந்து ஆட்கள் திரட்டப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை சிறிலங்கா இராணுவத்தினுள் அதிரடிப் படைப்பிரிவு (கொமாண்டோ றெஜிமென்ட்) ஒன்றும் அமைக்கப்பட இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த விசேட நடவடிக்கை இராணுவ அணி, கொமாண்டோ றெஜிமென்ட்டில் இருந்தும், ஸ்பெஷல் போசர்ஸ் றெஜிமெண்டிலிருந்தும் தெரிவு செய்யப்பட இருக்கின்றது. இந்த விசேட அணி கிழக்கு மாகாணப் பகுதியில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையிலேயே தன்னை முழுமையாக ஈடுபடுத்தும் என்றும், இந்தப் புதிய இராணுவ நடவடிக்கையானது ஆக்கிரமிக்கும் அல்லது கோபமூட்டும் தந்திரோபாயத்தை அடிப்படையாக கொண்டதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

கொமாண்டோ றெஜிமென்டிற்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி அடுத்தமாத முற்பகுதியில் அம்பாறையில் ஆரம்பமாகும் எனவும், இவர்களுக்கான முதற் பயிற்சி கணேமுல்லையில் இருக்கும் இராணுவத் தலைமையகத்தில் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இராணுவ அணிகளின் இத்தகைய விரிவாக்கத்தின் மூலம் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை மேலும் தீவிரமாக்கப்படும் எனவும், காட்டுப் பகுதிகளில் இருக்கக் கூடிய புலிகளின் முகாம்களை தேடியழிக்கும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டால் முஸ்லிம் மற்றும் சிங்கள கிராமங்களில் இருக்கும் தனிப்பட்ட இராணுவ நிலைகள் மீதான புலிகளின் தாக்குதல் தவிர்க்கப்படமுடியும் என்றும் இராணுவ அதிகாரிகள் நம்புகின்றனர்.

யாழ். செயலக

## கிளாலி கடற்கண்ணியில் 4படை பலியென ஊர்ஜிதம்

(கொழும்பு)

கிளாலி கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடியில் கொல்லப்பட்ட கடற்படையினரின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்படையினரின் மேலும் இரண்டு சடலங்கள் கிளாலி கடற்பரப்பில் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து கொல்லப்பட்ட படையினரின் தொகை நான்கென ஊர்ஜிதப்படுத்தப் பட்டுள்ளதாக. அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## ஹட்சன் கொலை முயற்சி; 12 பேர் விளக்கமறியலில்

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவருமான ஹட்சன் சமரசிங்கவையும், அவரது உதவியாளர்களையும் கடந்த ஜனவரி 20 ஆம் திகதியன்று குண்டு வீசிக்கொல்ல முயன்ற சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பன்னிரண்டு சந்தேக நபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இக்கொலை முயற்சிச் சம்பவம் ஐ. தே. க. வினுள் உள்ள உட்கட்சிப் பூசலின் எதிரொலியென அவதானிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திணைக்கள தபால்கள் விமான மூலம் அனுப்பப்படும்

[கொழும்பு]

அரசாங்கத் திணைக்களங்களால் யாழ்ப்பாண குடாநாடு மற்றும் தீவுப்பகுதிக்கு அனுப்பப்படும் கடிதங்கள் இனிமேல் விமான மார்க்கமாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையகம் கூறியுள்ளது. அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பவற்றால் அனுப்பப்படும் உத்தியோகபூர்வ கடிதங்களை விமான மார்க்கமாக அனுப்பி வைக்க கூட்டுப்படைத் தலைமையகம் இணக்கம் தெரிவித்திருப்பதாக தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார்.

## அரசுக்கு நிதியுதவி அளிக்க உலக வங்கி நிபந்தனை

(கொழும்பு) - றிட்சர்ட்பத்திரன

உலக வங்கிக்கும், சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களின் நிபந்தனைகளுக்கும் அரசாங்கம் எவ்வளவு தூரம் கட்டுப்படப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்றுகாலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்க சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், சுகாதார சேவை மற்றும் கல்விச் சேவைக்கு பணம் அறவீடு செய்யும்படியும், மக்கள் பாவிக்கும் பாவனைப்பொருள்களின் வரியை மேலும் உயர்த்தும் படியும், சம்பள திட்டத்தை மீள் பரிசீலனை செய்யும்படியும் அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

1992-95ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அரசுக்கு உதவுவதற்கு உலக வங்கியும் ஏனைய நிறுவனங்களும் நிபந்தனை விதித்திருப்பதாகவும் இதனாலேயே அவசர காலசட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் பணிப்புரைக்கிணங்க பாடசாலை அபிவிருத்திச் சங்க சட்ட மூலம் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## பாவற்குளம் பகுதிக்கு காணி அமைச்சர் விஜயம்

(கொழும்பு)

காணி, காணி அபிவிருத்தித் துறை அமைச்சர் காமினி அத்துக்கோறளை கடந்த வியாழனன்று வவுனியாவிற்கு அண்மையிலுள்ள பாவற்குளம் பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். இப்பகுதியின் புனரமைப்புக்கு தேவையான நடவடிக்கைளெடுப்பதற்காகவே அவர் விஜயத்தை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

இப்பகுதிகளில் புனரமைப்பு என்ற பெயரில் குடியமர்த்தப்பட்ட சிங்களவர்களுக்கு மேலும் செய்து கொடுக்கக் கூடிய வசதிகள் குறித்து ஆராய்வதே அமைச்சரின் இந்த விஜயத்திற்கான நோக்கமென தெரிவிக்கப்படுகின்றது.

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க் குமரன் அறிவித்துள்ளார்.

## மீட்பு நிதி சேகரிப்பு

இன்று முற்பகல் 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறியோர் இச் சந்தர்ப்பத்தில் தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொருள்கள் விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் மண்ணெண்ணெய்விலையில்நேற்று திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் சுமார் 250 ரூபாவில் இருந்து 200 ரூபா வரை குறைந்துள்ளது.

இதேவேளை மேலும் பல அத்தியாவசியப்பொருள்களின் விலைகளிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. (க)

## திட்டப் பணிப்பாளரின் கடிதம் பரிசீலனையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு நிலவிவரும் பற்றாக்குறை நிலையை நீக்கி உணவுப் பொருள்களின் விநியோகத்தை சீராக்குவதற்குரிய நடவடிக்கைகள் குறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க இருப்பதாக கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவு தெரிவித்துள்ளது.

குடாநாட்டின் அத்தியாவசிய உணவுத் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் குடாநாட்டுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பி வைக்கும் சாத்தியமான சில நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

குடாநாட்டில் கடந்த பல மாதங்களாக நிலவி வருகின்ற மிகமோசமான உணவு நெருக்கடியை நீக்குமாறும் இதற்காக அத்தியாவசிய உணவுப் பொருள்களை குடாநாட்டுக்குள் அனுப்பி வைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கும்படி யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. பத்ம [6 ஆம் பக்கம் பார்க்க]

## மார்ச் முதல் வாரத்தில் நான்கு கப்பல்கள் வரும்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு அடுத்தமாதம் முதல் வாரத்திற்குள் நான்கு கப்பல்கள் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது

தற்பொழுது காங்கேசன் துறையில் தரித்துள்ள மெரினால்என்ற கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வருமெனவும், அடுத்த மூன்றாந்திகதி ''குமாரி'' என்ற கப்பலும் 05 ஆம் அல்லது 06 ஆம்திகதி ''குமண'' என்றகப்பலும், 06 ஆம் அல்லது 07ஆம் திகதி 'நில்கிரி' என்ற கப்பலும் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவற்றிலிருந்து துரிதமாக உணவுப்பொருள்களை இறக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

## வரி விளம்பரம்

### பாடல் பதிவு

நீங்கள் விரும்பும் பாடல்களை இப்போது கொம்பக்ட் டிஸ்க் மூலம் பதிவு செய்து பெற்றிட இன்றே வாருங்கள்: ஷண் றெக்கோடிங் ஸ்பொட், பஸ்நிலைய வயிரவர் கோவில் அருகாமையில், நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். (4066)

### சேவை

றொனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாக வழங்கப்படும், இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ். தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4347)

### திருக்கணித பஞ்சாங்கம்

ஸ்ரீமுகபுதுவருட(1993-1994) திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. விலை ரூபா 65-00 வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் உண்டு. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3381)

### சலனம்

சென்னை ஃபிலிம் சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை இருமாத இதழாக வெளிவருகின்றது. விபரங்கட்கு, வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (4063)

### துளிர்

தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ், மற்றும் சலனம், சுபமங்களா, முன்றில், ஆகவே, காலம், நந்தலாலா போன்ற தரமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனாவீதி, யாழ்ப்பாணம். (4061)

## உரம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சிறுதானியச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உர வகைகள் வழங்கப்படவுள்ளது. அமோனியா உரம் 650 ரூபாவாகவும், ரி.டி.எம் 705 ரூபாவாகவும் வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் புதன்கிழமை பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்துடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில்இருந்து இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். [க] [பா] [நி]

## பண்ணிசைப் போட்டி முடிவுகள்

வட்டுக்கோட்டை கொத்தணியைச் சேர்ந்த பதினைந்து பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் பாலர் பிரிவில் பெண்களுக்கான போட்டியில் வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலையைச் சேர்ந்த ந. மாலினி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். இப்போட்டியின் இரண்டாமிடத்தை அராலி வள்ளியம்மை வித்தியாசாலையைச் சேர்ந்த சி. தபோதினியும், மூன்றாமிடத்தை வட்டு மேற்கு அ. மி. த. க. பாடசாலையைச் சேர்ந்த செ. சுரேஷினியும் பெற்றுக்கொண்டனர். இப்பிரிவில் ஆண்களுக்கான போட்டியில் வட்டு கார்த்திகேய வித்தியாசாலையைச் சேர்ந்த ச. பகீரதன் வெற்றி பெற்றார்.

ஆரம்ப பிரிவு பெண்களுக்கான போட்டியில் வட்டு சுப்பிரமணியவித்தியாசாலையின் ப.கல்பனா முதலிடத்தையும், சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் நா. தீபா இரண்டாம் இடத்தையும், அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையின் பு. கௌரிதேவியும், வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலயின் ஜெ. கிருஷாலினியும் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

கீழ்ப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் சி.பிரதீபன் முதலிடத்தையும்க. ஜனார்த்தனன் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான போட்டியில் சி.விலாசினி, முதலிடத்தையும், வ துஷானா இரண்டாமிடத்தையும், வி. தனுஜா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

கனிஷ்ட பிரிவு பெண்களுக்கான போட்டியில் ச. வாசுகி முதலிடத்தையும், த. தர்மினி இரண்டாமிடத்தையும், வ. பூமகள் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். சிரேஷ்ட பிரிவு பெண்களுக்கான போட்டியில் ப. சாந்தரூபா முதலிடத்தையும், ஏ. கவிதா இரண்டாமிடத்தையும், வே. பாரதலட்சுமி மூன்றாமிடத்தையும் பெற்றனர். குழு நிலைப் போட்டிகளில் கீழ்ப் பிரிவில் சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை முதலிடத்தையும், அராலி வடக்கு அ. மி. த. க. இரண்டாமிடத்தையும், அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. கனிஷ்ட பிரிவில் வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலயம் முதலிடத்தையும், பிளவத்தை அ. மி. த. க. இரண்டாமிடத்தையும், அராலி கிழக்கு அ. மி த. க. பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

### வீரவணக்க கூட்டங்கள்

இரண்டாம் மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 7.30 மணியளவில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தடி, வடமராட்சி பகுதியில் சக்கோட்டை மாதா கோவில் முன்றல், குஞ்சர் கடைப் பிள்ளையார் கோவிலடி மற்றும் தென்மராட்சியில் கைதடி வடக்கு விக்கினேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்திலும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது. கூட்டத்தைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

### சக்கரத்தாழ்வார் வீதியுலா

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு சிறி நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக சிறி சக்கரத்தாழ்வார் திருவுருவச் சிலை எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தாவடியில் இருந்து அளவெட்டிக்கு வீதியுலாவாக எடுத்துச் செல்லப்பட இருக்கிறது.


## யாழ். இந்துவை வாழ்த்துகிறோம்

St. Johns கிரிக்கெட் அணியை வெற்றி கொண்டு சாதனை புரிந்த யாழ். இந்து வீரர்களை வாழ்த்துகிறோம்

(4365) கிரிக்கெட் ரசிகர்கள்



## இன்னிசை வேந்தனை வாழ்த்துகிறோம்

இன்று விழாக் காணும்...
இளங்கலைஞர் மன்ற தலைவர்
இன்னிசை வேந்தன்
திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்களுக்கு
கம்பன் கழகம் நடாத்தும் பாராட்டுவிழா சிறக்க
பண்புடன் வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்
திரு. N. R. கோவிந்தசாமி குடும்பம் (நாதஸ்வரம்)
திரு. N. R. சின்னராசா குடும்பம் (தவில்)
திரு. N. R. சந்தானகிருஷ்ணன் குடும்பம் (நாதஸ்வரம்)
(சி-6111)



## வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச்சங்கம் யாழ்ப்பாணம்

புற்றுநோய் வராமல் தடுப்பதற்கான இலவச பரிசோதனையும் / ஆலோசனைகளும் எமது சங்கத்தால் வழங்கப்படுகின்றன.

வாரத்தில்:

(1.) செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் - மாலை 3.00 - 5.00 வரை.
ஞாயிற்றுக்கிழமையில் - காலை 10.00 - 12.00 மணிவரை.
வாய் பரிசோதனை பல் வைத்திய நிபுணரினால் மேற்கொள்ளப்படும்.

(2.) திங்கள், புதன்கிழமைகளில் - மாலை 3.00 - 5.00 மணிவரை
பெண்களுக்கான மார்புப்பரிசோதனை வழங்கப்படும்.

விபரங்களுக்கு சங்கப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

இல. 228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6102)


இந்தியக் கடவுச்சீட்டு பெற்ற

## 84,000 பேருக்கும் குடியுரிமை வழங்கவேண்டும்

### அமைச்சர் தொண்டமான் கோரிக்கை

(கொழும்பு)

இந்தியக் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டிருக்கும் இந்திய வம்சாவளியினரான 84,000 பேருக்கும் இலங்கை குடியுரிமை பெற்றுக்கொடுக்க வகை செய்யப்படும் என்றும், இதற்கான பேச்சுவார்த்தைகளில் தான் தற்போது ஈடுபட்டிருப்பதாகவும் அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

கலகாநகரில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில்; இந்த 84,000 பேருக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கை என்றும், இதற்கான பேச்சுவார்த்தையில் தான் தற்போது ஈடுபட்டிருப்பதாகவும் இப்பேச்சுக்களில் நிச்சயம் வெற்றியீட்டப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## திருட்டு

இனம் தெரியாதவர்களால் பட்டப்பகலில் தங்கநகைகள் களவாடப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் மந்துவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; மந்துவில் கொடிகாமத்தைச் சேர்ந்த க. வீரபத்திரர் என்பவர் வீட்டில் சென்றஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணியளவில் வீட்டார் தோட்டத்துக்கு சென்றபோது வீட்டு யன்னல்கதவால் பாய்ந்து அங்கிருந்த தாலிக் கொடி [4பவுண்] உட்பட 10 பவுண் நகைகளைக் களவாடிச் சென்றுள்ளனர் என கூறப்படுகின்றது. [86]


## நினைவு கூருகின்றோம்... 1993-2-28

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - சித்தாண்டிப் பகுதியில் மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

திருமலை - மூதூர், கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு மட்டு - களுதாவளைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். கௌதமன் (வேலாப்போடி திருச்செல்வம் கருணைநாயகம் - அம்பிளாந்துறை - மட்டு.)

யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

மோகன் (சுப்பையா பாலமோகன் - சந்திரபுரம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி - யாழ்.)

நெல்சன் (கணபதிப்பிள்ளை பாலகுமார் - 'நகுலா வாசா', பாலகுமார் வீதி, சிறுவிளான், இளவாலை - யாழ்.)

கில்பேட்-கிட்லர் (கந்தசாமி நடராஜா - கருங்காலி, காரைநகர் - யாழ்.)

தேவானந் (வேலும்மயிலும் கேதீஸ்வரன் - கேணிப்புலம் ஒழுங்கை, மயிலிட்டி, காங்கேசன் துறை - யாழ்.)

சிவசிறி (செந்தூரபாண்டியன் ஹரிகரமூர்த்தி - 6-ம் வட்டாரம், புங்குடுதீவு - யாழ்.)

1991 ஆம் ஆண்டு யாழ் - காங்கேசன்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் வீரச்சாவெய்திய -

லெப். கபில்-வீரபாண்டியன் (இராசரத்தினம் இராஜபாண்டியன் - 74/1, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு - யாழ்.)

1992 ஆம் ஆண்டு மட்டு - பெண்டுகள்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

இருதயன் (சி. தர்மலிங்கம் - சித்தாண்டி - மட்டு.)

காங்கேசன்துறை கடற்படை முகாமிலிருந்து வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு 'சவட்டன்' ரோந்துப் படகில் சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது தமிழீழக் கடற்பரப்பில் (தாளையடி) வைத்து வழிமடக்கி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஏற்பட்ட கடுஞ் சமரில் வீரச்சாவெய்திய - கடற்புலிகள்:-

லெப். சஞ்சீவன் (வைரமுத்து ஜெயேந்திரன் - மாங்கேணி, வாழைச்சேனை மட்டு.)

கப்டன் தமிழரசன்-சியாப் (பரமகுரு உதயகுமார் - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை- யாழ்.)

2-ம் லெப். சிவலோகநாதன்-லோகன் (வேலாயுதபிள்ளை விக்கினேஸ்வரன் - தாளையடி, உடுத்துறை - யாழ்.)

2-ம் லெப். ஆனந்தன் (அழகன் அண்ணாத்துரை - புனிதநகர், கற்கோவளம், காரைநகர் - யாழ்.)

யாழ். கோட்டைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட எறிகணை வெடி விபத்தில் எமைப் பிரிந்த -

மயிலினி (ஜீவராணி சின்னத்தம்பி - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6104)

# தலைமறைவான படையினர் நாசகாரசெயல்களில் ஈடுபாடு

(அக்கரைப்பற்று)

நாட்டில் தலைமறைவாகியுள்ள சிறிலங்காப்படையினரில் பெரும்பாலானவர்கள் அம்பாறை, பொலநறுவை, மொனறாகலை, பதுளை, ஆகிய மாவட்டங்களில் தஞ்சமடைந்து கொண்டு நாச வேலைகளில் ஈடுபடுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களிலும் ஏனைய மாவட்டங்களிலும் நடைபெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்களுக்கு இவர்களே காரணமென்றும் சொல்லப்படுகிறது.

படையில் இருந்தவர்கள் தலைமறைவாகியுள்ளார்களா அல்லது சேவையில் இருக்கிறார்களா என்று பொலீசாரால் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது உள்ளதாம். சேவையில் இருப்பது போல் வழமையான அடையாள அட்டையும் ஆயுதங்களும் அவர்கள் வசம் இருப்பதாகவும், இவற்றைக் கொள்ளைச் சம்பவங்களுக்குச் செல்லும் போது பயன்படுத்துவதாகவும் தெரியவந்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் விசாரணைகள் நடத்தினால்சேவையில் இருப்பதாகவும், விடுமுறையில் வந்ததாகவும், நண்பர்களைப்பார்க்கச் சென்றதாகவும் கூறி தப்பிக் கொள்கின்றனர். கையும்மெய்யுமாகப் பிடிபடும் போதுமட்டுமே இவர்களை இனம்கண்டு கொள்ளக் கூடியதாக இருப்பதாக பொலீசார் தெரிவித்தனர்.

நயினாதீவில் கடற்பபடையால்

## கைதானவர் குறித்து தகவல் ஏதும் இல்லை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில்சிறிலங்காகடற்படையினரால்பொதுமகன்ஒருவர் கைதுசெய்யப்பட்டுநீண்டகாலமாகியும் அவரைப்பற்றி தகவல் எதுவும் இல்லையென அங்கிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகின்றது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது; கடந்த வருட பிற்பகுதியில் இளம்குடும்பஸ்தரான மேற்படி பொதுமகனை விசாரணைக்கென கடற்படையினர் கூட்டிச் சென்றதாகவும் அவரைப்பற்றி விசாரிக்கச் சென்ற உறவினர்களிடம் ஓரிரு நாட்களில் விடுதலை செய்து விடுவதாக கூறியதாகவும், ஆனால் இன்றுவரை அவர் விடுதலை செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. சில வாரங்களின் பின் பிரஸ்தாப நபரைப் பற்றி நயினாதீவு கடற்படை முகாமில் விசாரித்தபோது காரைநகர் கடற்படை முகாமிற்கு அனுப்பி விட்டதாக கூறப்பட்டதாம். அதையடுத்து காரைநகர் கடற்படை முகாமில் விசாரித்தபோது சம்பந்தப்பட்ட நபர் பற்றி தமக்கு எதுவுமே தெரியாதென படையினர் 'கையை விரித்து' விட்டனராம். (22)

## போக்குவரத்து வசதிகள் அரசு செய்யவில்லை

### எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டு மக்களிற்கு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்கத் தவறிய அரசாங்கம் கிளாலிக் கடல் ஏரிப்பகுதியூடாகப் பயணம் செய்யும் பொது மக்களைச் சுட்டுக் கொல்கிறது என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. அரசின் போக்குவரத்து தடையினாலேயே பொதுமக்கள் கிளாலி கடல் ஏரியைப் பயன்படுத்துகின்றனர். இதனையும் அரசு தடுத்து வருகின்றது என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் பி. தயாரத்ன பொதுமக்களின் போக்குவரத்து வசதி கருதி திருமலையிலிருந்து காங்கேசன் துறைக்கு படகுச் சேவையை அரசு ஆரம்பித்துள்ளது இவ்வாறு நிலைமை இருக்கும் போது எதிரணியினர் அரசு மீது குற்றம் சாட்டுவது தவறு என்றார்.

அவசர நோயாளர்கள் கூட கப்பல் சேவை மூலம் திருக்கோணமலை செல்ல பலமாத காலம் காத்திருக்க வேண்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள் கடத்தல் இரு தமிழ் வர்த்தகர் கைது

கொழும்புக்கும் சென்னைக்கும் இடையே போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கொழும்பில் இரண்டு தமிழ் வர்த்தகர்கள் பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - சென்னை-கராச்சிக்கு இடையே போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைக்கான ஒரு அமைப்பை இவர்கள்பேணியிருப்பதாகவும் பொலீசார் மேலும் கூறியுள்ளனர்.

இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் நான்கு பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இவர்களிடமிருந்து மூன்றுமில்லியன் ரூபா பெறுமதியுடைய போதைப்பொருள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கிராண்ட்பாஸ், கொட்டாஞ்சேனை, மருதானை மற்றும் கொம்பனித்தெருபகுதிகளைச் சேர்ந்த இவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும், இந்த அமைப்பின் தொடர்பாளர்களாகச் செயற்பட்டதாகக் கருதப்படும் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

இச் சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து வெளிநாட்டு நாணயங்கள் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வருவதிலும் இவர்கள் ஈடுபட்டிருப்பது தெரியவந்திருப்பதாகவும் பொலீசார் குறிப்பிட்டுள்ளனர்.

## குடைச் சுவாமிகள் குருபூசை

தவத்திரு கந்தையா (குடை) சுவாமிகள் வருடாந்தக் குருபூசை இன்று கோண்டாவில் கிழக்கு சிறிஅற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் அமைந்திருக்கும் அவரது சமாதியில் நடைபெறும். விசேட அபிஷேகம், தீபாராதனை நடைபெற்றுபகல் 12.30 மணியளவில் அன்னதானம் நடைபெறும்.

## சொந்த இடத்தில் குடியேற நடவடிக்கை எடுக்கவும்

### அம்பாறை மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் முகாம்களில் தங்கியுள்ள அகதிகளை அவர்களது சொந்த இடங்களில் சென்று குடியேற நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த கால சிறிலங்கா இராணுவத்தினரதும் ஊர்காவல் படையினரதும் தாக்குதல்களுக்கு அஞ்சித் தமது இடங்களை விட்டு வெளியேறி இருபத்திநான்கு முகாம்களில் தங்கியிருந்த சுமர் 5,475 குடும்பங்களை மீளக் குடியமர்த்தக்கோரி அகதிகள் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜரை அனுப்பியுள்ளது.

## பொலீஸ் துப்பாக்கிச் சூடு; வத்தளையில் இளைஞர் பலி

(கொழும்பு)

வத்தளைப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் பொலீசாரால் சுடப்பட்டு பலியானார். பேலிய கொட பொலீஸ் சுப்றின்டன்ட் டக்ளஸ் பீரிஸ் வத்தளைப் பகுதியில் இருக்கும் சந்தைக்குச்சென்ற சமயம் மூவரைக் கொண்ட கோஷ்டியொன்று 38 ரக துப்பாக்கியால் அவரைச் சுட முயன்றதாகவும், அவர் பதில் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், கூறப்படுகின்றது.

## வடமராட்சியில் பால பண்டித வகுப்புகள்

பருத்தித்துறை கல்விக்கோட்டத்தில் இலவச பாலபண்டித வகுப்பு கடந்த புதன்கிழமை ஆரம்பமானது.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமான இவ்வகுப்பில் வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை கலந்து சிறப்பித்தார். [30]

## கிராமசேவகர் நியமனம் வழங்க அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

இடைநிறுத்தி வைக்கப்பட்ட கிராமசேவகர்களின் நியமனத்தை உடனடியாக வழங்கும்படி மாகாணசபைகளின் செயலாளர்களுக்கு, பொது நிர்வாக மாகாணசபைகளின் அமைச்சர் பெல்டஸ் பெரேரா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## 52வது நாள் கண்ணீர் அஞ்சலிகள்



அமரர்

சித்திரவடிவேல் - இராசதுரை (ராஜன்)

(யா - சித்திவிநாயகர் வித்தியாலய பழைய மாணவன்)

மலர்வு 25-9-1972 — உதிர்வு 8-1-1993

எமது அன்பிற்கினிய நண்பனே ராஜன்
நீ மறைந்து 52 நாட்கள் என்ன?
52 வருடங்கள் தான் சென்றாலும்
மறப்போமா உனது நட்பை.

உனது உயிர் நண்பர்கள்
சுப்பர் மடம்


[நாளை 1-3-93 தெனி அம்மன் கோவிலடியில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் இவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்].

சுப்பர்மடம்
பருத்தித்துறை.

குடும்பத்தினர்
(சி-6108)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 15 — 02 — 1950



விண்ணில் 29 — 01 — 1993

அமரர்

### கந்தையா சிவராஜன்

[நேரக்கணிப்பாளர் - லங்கா சிமெந் லிமிட்டட் - காங்கேசன்துறை]

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்கள் குல விளக்காய் - நல்ல
குடும்பத் தலைவனாய்
பண்பின் சிகரமாய்
பாரோர் போற்றும் நல்லவனாய்
வாழ்ந்து இன்று எம்மையெல்லாம்
விட்டுப் பிரிந்து திங்கள் ஒன்று
சென்றாலும் உம் நினைவு எம்
நெஞ்சை விட்டகலாது நிலைத்திருக்கும்
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டி
நிற்கும் நாங்கள்

'இளவேனில்'
காட்டுப்புலம்
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

மனைவி சி. இந்திராணி
மகன் சி. பிரகலாதன்
மைத்துனன், சகோதரர்கள்
[சி-6109]

## தீவக ஆசிரியருக்கு சம்பளம் வழங்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகப்பாடசாலைகளி லிருந்து 1-9-92 தொடக்கம் யாழ்ப்பாணம் வந்து தமதுகடமைகளை ஆற்றிவரும் நான்கு ஆசிரியர்களுக்கும் அவர்கள் தமது கடமையை ஏற்றுக்கொண்ட திகதி தொடக்கம் மீண்டும் அவர்கள் தமது சொந்தப் பாடசாலைகளுக்கு திரும்பும்வரை அவர்களது சம்பளத்தை 1-9-92 தொடக்கம் வழங்குமாறு யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளரை வடகிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு வ.கி,மா - க அ-ஆசி-ஏ-இலக்கமும்21-1-93 ஆம்திகதிய கடிதப்படி அறிவித்தல் அனுப்பி உள்ளது,

அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்தில் இருந்துஇரு ஆசிரியர்களும் எழுவை தீவு முருகவேள் வித்தியாலயத்தில் இருந்து இருஆசிரியர்களும்இவ்வாறு தாம் கடமையேற்ற நாள் தொடக்கம் தமது முழுச் சம்பளத்தையும் பெறாமல் தமது கடமைகளை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இதன் பிரதி இவர்கள் கடமையாற்றும் வேலணைக் கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கும் வடகிழக்கு மாகாணக்கல்வி அமைச்சரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## நிவாரணப் பொருள்கள் அடுத்த வாரம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்களுக்கான பெப்ரவரி மாதத்திற்குரிய முதல் இரண்டு கிழமைகளுக்குமான இலவச உலர் உணவு விநியோகம் அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது.

மேற்படி நிவாரண.விநியோகத்திற்கான உத்தரவை யாழ். செயலக புனர்வாழ்வுப்பகுதி சகல பல நோ. கூட்டுறவுச் சங்கங்களிற்கும் பிறப்பித்துள்ளது. இதன்படி தனி ஒருவரிற்கு 2·500 கிலோ அரிசி, 1·800 கிலோ மா, 600 கிராம் சீனி, மற்றும் பருப்பு என்பனவும், இரண்டு அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு 3·750 கிலோ அரிசி, 4·250 கிலோ மா, 1 கிலோ சீனி, 150கிராம் பருப்பு, மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு, 6 கிலோ அரிசி, 4·150 கிலோ மா, 1·500 கிலோ சீனி 250 கிராம் பருப்பு, நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு 7 கிலோ அரிசி, 4·250 கிலோ மா, 2 கிலோ சீனி, 500 கிராம் பருப்பு, ஐந்து அங்கத்தவர்களைக் கொண்டகுடும்பத்திற்கு8·500 கிலோ அரிசி, 6 கிலோ மா, 2·500 கிலோ சீனி, 500கிராம் பருப்பு என்ற அளவுகளின் அடிப்படையில் விநியோகிக்கப்படவுள்ளது. (பா)

(ஸ்ரீ) இரேணுக குருப்யோம் நம:

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



செல்வி இலிங்கிஸ்ரீ ஸ்ரீதரஐயர் அகிலாண்டேஸ்வரி [சிவனியா]

கொடிகாமத்தைச் சேர்ந்த இலிங்கிஸ்ரீ ஸ்ரீதரஐயர் இரஞ்சினி அம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வி சிவனியா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (28. 2. 1993) தனது ஸ்ரீபவன இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஆசைச்சித்தப்பா மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவரை பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் சீரும், சிறப்புமாக குளக்கட்டு விநாயகர் அருளோடு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

- குடும்பத்தினர்

ஸ்ரீபவனம்,
கொடிகாமம் வடக்கு,
கொடிகாமம்.

(4330)

## பெறுபேறுகள் விரைவில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான 1989-90 பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரமளவில் வெளியாகுமென பல்கலைக்கழக வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது. (05)

### பயிற்சிக் கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

தென்மராட்சிப் பகுதியில் உள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பயிற்றப்பட்ட மாதர்களுக்கு எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பயிற்சிக் கருத்தரங்கு இடம்பெறும்.

இக் கருத்தரங்கிற்கு ஒவ்வொரு சங்கங்களிலிருந்தும் அங்கத்தவர்களைப் பங்குபற்ற அனுப்பி வைக்கும்படி இப்பகுதிக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வை. ராஜராசேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக் கிடையில் பங்குபற்றுபவர் விண்ணப்பங்களை ரூபா பத்து இணைத்து அனுப்பும்படிஅவர் கோரியுள்ளார். (24)

### பூங்கா திறந்து வைப்பு

(வடமராட்சி)

மேஜர் செங்கதிர் வீரவேங்கை சிந்துவின் இரண்டாம்ஆண்டு நினைவு நாளான கடந்த 25ஆம் திகதி நெல்லியடிச் சந்திப் பகுதியில் பூங்கா ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

வடமராட்சிசிற்றூர் சேவைச் சங்கம் பூங்கா அமைப்பு பணிகளில் ஈடுபட்டனர். நெல்லியடி தொழிலாளர் சங்கம் செங்கதிரின் பெரிய கட்அவுட்டுக்குமாலை அணிவித்து கௌரவித்தனர். தொழிலாளர்சங்கம் இரண்டாம் ஆண்டு நினைவையடுத்து இக் 'கண்ணீர்பூக்கள்சமர்ப்பணம்' என்ற பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டனர். (யோ)

### உடற்பயிற்சி போட்டிகளின் பெறுபேறு

(குருநகர்)

யாழ். தெற்கு கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விபரங்கள் வருமாறு:

15 வயதுக்கு உட்பட்டோர் ஆண்கள் பிரிவு: 1ஆம் இடம், யாழ்.சென் ஜோசப்ஸ் வித்தியாலயம் கொழும்புத்துறை. 2-ம் இடம் யாழ் சென் சாள்ஸ் வித்தியாலயம். 3ஆம் இடம் யாழ் சென் ஜேம்ஸ் வித்தியாலயம் குருநகர்.

17 வயதுக் குட்பட்டோர் ஆண்கள் பிரிவு: 1ஆம் இடம் யாழ்.சென் சாள்ஸ் மகாவித்தியாலயம், 2ஆம் இடம் யாழ். சென் ஜோசப்ஸ் வித்தியாலயம் கொழும்புத்துறை, 3 ஆம் இடம் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம் குருநகர்.

19 வயதுக்குட்பட்டோர் ஆண்கள் பிரிவு: 1ஆம் இடம் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம் குருநகர். [21]

★

(கொடிகாமம்)

யா/மட்டுவில் மகாவித்தியாலய கொத்தணி மட்டப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டி சென்ற புதன்கிழமை வித்தியாலய மைதானத்தில் கொத்தணி அதிபர் அ.பொ. செல்லையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதில் 19வயதுக்குக்கீழ்ஆண், பெண் இரண்டிலும் மட்டுவில் மகாவித்தியாலயமும் 17வயது ஆண், பெண் இரண்டிலும் மட்டுவில்மகாவித்தியாலயமும் 15 வயது ஆண், பெண் இரண்டிலும் யா. கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையும் வெற்றியீட்டியது. [86]

## 1-ம் ஆண்டு நினைவு தினம்



அன்னை மடியில்.
15-11-1934

❀ ❀ ❀

முருகனடியில்:
12-03-1992

### பொ. பாலேந்திரா ஐயர்

திதி - 01.03.1993

எமது குடும்பத் தலைவரின் ஒரு வருட ஆத்மசாந்திக் கிரியை நாளை01-03-1993காலை 10மணி அளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக நண்பகல் 12 மணி அளவில் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூசையும், அன்னதானமும் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தொண்டமனாறு. -குடும்பத்தினர்

(4356)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்
22.12.1965

வீரச்சாவு
28.02.1987

### வீரவேங்கை நெல்சன்

(கணபதிப்பிள்ளை பாலகுமார்)

சிறுவிளான், இளவாலை

உறவுகள் துறந்து உரிமைகள் தேடி
ஓடிய வீரனே - நெல்சா
கொஞ்சமும் அஞ்சிடாமல் கொள்கைவழி நடந்து
கொடுத்தீர் உமதுயிரை - நாம்
கணமேனும் மறப்போமோ?

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

மாவீரன் நெல்சன்
குடும்பம்

(4338)

## ஓராண்டு நினைவுத்துளிகள்



வீரப்பிறப்பு
15.07.1973

வீரச்சாவு
28.02.1992

### வீரவேங்கை மயிலினி

(சின்னத்தம்பி ஜீவராணி)

உதடுகளின் புன்சிரிப்பும்
உயர்ந்த உன் தோற்றமும்
துணிவான உன்நடையும்
கனிவான உன் பேச்சும்

உதயத்திலும் உச்சியிலும் அந்தியிலும் எம்
இதயத்தை விட்டு அகல மறுக்கிறதே மயிலினி.

— சித்தப்பாமார், மாமிமார்.

உதயதாரகை வீதி,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(4352)

### சிந்தனைக்கு

ஒன்றைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதற்காகவே, ஒருவனுக்குச் சம்பளம் கொடுத்து வைத்திருக்கும்போது, அதை அவன் புரிந்து கொள்ளும்படி செய்வது கடினம்தானே!

— அப்டன் ஸிங்க்ளேர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28 – 02 – 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## உலகின் போக்கிற்கு முரணானது

இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரத்தில் இந்தியாவும், குறிப்பாக தமிழகப் பொலீஸாரும், அரசும் தொடர்ந்தும் மிகக் கேவலமான வழிமுறைகளைக் கடைப்பிடித்து வருவதோடு, இலங்கைத் தமிழரின் விடுதலைப்போராட்டத்தைச் சிங்களப் பேரினவாத அரசுடன்சேர்ந்து நசுக்குவதில் தீவிரகவனம் செலுத்திவருவதாகவே தெரிகின்றது.

இறுதியாகக் கடந்த சில தினங்களின் பின் ஐம்பதிற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதோடு, அவர்களின் கைவிரல் அடையாளங்களும், புகைப்படங்களும் சிறிலங்கா புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டமை மீண்டும் இதனையே வெளிக்காட்டுவதாக உள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரத்திலும் சரி, விடுதலைப் புலிகள் விவகாரத்திலும் சரி, இந்தியாவும் சரி, தமிழக அரசும் சரி தொடர்ந்தும் மனித நேயமற்ற, சர்வதேச விதிமுறைகளுக்குப் புறம்பான நடவடிக்கைகளையே கடைப்பிடித்து வருகின்றன. அவர்கள் இவ்விடயத்தில், இலங்கைத் தமிழ் மக்களின் உணர்வுகளையோ, அன்றி தமிழக மக்களின் உணர்வுகளையோ கருத்திற் கொள்வதாகவோ அன்றி மதிப்பதாகவோ இல்லை.

இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் இணைந்து இலங்கைத் தமிழ் அகதிகளை பலாத்காரமாக வெளியேற்றுதலுடன் ஆரம்பித்த நடவடிக்கையானது, விடுதலைப் புலிகளின் கப்பல்களைச் சர்வதேச கடற்பரப்பில் வைத்து மறித்தல் வரை நீண்டு கொண்டே சென்றது. இதன் காரணமாக விருத்தியடைந்த சிறிலங்கா - இந்திய உறவும் புலனாய்வு அறிக்கைகளைப் பரிமாறிக் கொள்வதோடு, கடலில்கூட்டுரோந்தும் பரஸ்பரம்வேண்டப்படுபவர்களை மாற்றிக் கொள்ளும் வரையிலும் வளர்ந்துவந்துள்ளது.

அதாவது, இலங்கைத் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடச் சிறிலங்கா அரசாங்கத்துடன் இந்தியா நேரடியாகக் கூட்டுச் சேர்ந்துள்ளதோடு, தமிழக அரசும் அதற்கு உறுதுணையாகச் செயற்பட்டும் வருகின்றது. இதில் தமிழகஅரசின் இந்நடவடிக்கையானது இலங்கைத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, தமிழக மக்களுக்கும் செய்யும் துரோகமாகும்.

தமிழகத்தில் உள்ள ஆட்சியாளர்கள் இன்றும் இந்தியத் தேசிய வாதம் பற்றிப் பேசுகின்றார்கள். ஆனால் இது அவர்கள் ஆட்சி அதிகாரத்தைப் பேணுவதற்காக மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையாகவே கொள்ளவேண்டும். ஏனெனில் உலகில் இன்று நடைபெறும் மாற்றங்களும் இந்தியா எதிர்நோக்கும் பாரிய மாற்றங்களும் தமிழ் நாட்டுமக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் எழுச்சியும் இவர்களின் இப்பேச்சிற்கு முரணானதாகவே காணப்படுகின்றது. இன்று உலகில் தேசிய இனங்களின் விடுதலை என்பதே முனைப்பான பிரச்சினையாகவுள்ளது. சமஷ்டி அமைப்பு என்பதும், அதன்மூலம் சிறுபான்மையினரின்உரிமைகள் பேணப்படுதல் என்பதும் மேற்கு நாடுகளிலேயே கேள்விக்குரியனவாகிவிட்டன.

இந்நிலையில், தமிழக அரசியல்வாதிகளும் சரி, இந்திய மத்திய அரசும் சரி, இலங்கைத் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்றும், அதன்மூலம் இந்தியாவில் - குறிப்பாகத் தென்னிந்தியாவில் ஏற்படப் போகும் தேசிய இன விடுதலைப் போராட்டங்களை நசுக்கி விடலாம் எனக் கருதுவதோ, இன்றைய உலகின் போக்கிற்கு முரணானதும், வெற்றி அளிக்க கூடியதொன்றும் அல்ல.

# கட்சித்தலைமைப்பதவியை ராவிடமிருந்துபறிக்க முயற்சி

(டில்லி)

பிரதமர் நரசிம்மராவை கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாட்டில்கொண்டுவரப்படும் என்று காங்கிரஸ் கட்சிக்குள் இருக்கும் அதிருப்தி கோஷ்டியின் தலைவரான கே. என். சிங் கூறியுள்ளார்.

பிரதமர் நரசிம்மராவ் கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அண்மையில் நடந்த கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது தெரிந்ததே.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் அடுத்த மாநாடு மார்ச் 27, 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய திரு. கே. என்.சிங் மேலும் கூறுகையில், பிரதமர் நரசிம்மராவ் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கைக்கு கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவிப்பதாகவும், நரசிம்மராவ் தாமாகவே கட்சித் தலைவர் பதவியைத் துறக்க முன்வந்தால் அவர் நியமிக்கும் ஒருவரைக் கட்சித்தலைவராக ஏற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

## ரயில் கட்டண உயர்வு பற்றி ஜெயலலிதா பேசக் கூடாது

(சென்னை)

தமிழ்நாட்டில் சொத்துவரி, நிலவரி, பேருந்து கட்டணம் ஆகியவற்றை உயர்த்தியுள்ள செல்வி ஜெயலலிதாவுக்கு ரயில்வே வரவு செலவுத் திட்டம் பற்றியும்அரிசி, சீனி விலை பற்றியும் மத்திய அரசைக் குறைகூறிப் போராட்டம் நடத்த எந்தவித உரிமையும் இல்லையென்று தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

நேற்று முன்தினம் மதுரையில் செய்தியாளரிடம் பேசிய அவர், அண்மையில் புதுடில்லியில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் காயமடைந்ததற்கு வருத்தம் தெரிவிப்பதாகவும், அதேசமயம் மத்திய அரசு இதேபோன்ற சம்பவங்களுக்கு தீவிர நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் அயோத்தியில் சோகசம்பவங்களைத் தடுத்திருக்க முடியும் என்றும் கூறினார்.

தி. மு. க., இந்திரா காங்கிரஸ் கூட்டணி பற்றிக் கேட்டபோது, தற்போது இத்தகைய கூட்டணிக்குச் சாத்தியக்கூறு இல்லைஎன்று குறிப்பிட்டார். ஆனால் வகுப்புவாதக் கட்சிகளின் செயற்பாடுகளில்நெருக்கடி ஏதேனும் தோன்றுமேயா

- கருணாநிதி

யின் இந்திரா காங்கிரசுடன் நட்பாயிருப்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டி இருக்கும் என்றும் தெரிவித்தார்.

## ரயில்வே கட்டண உயர்வில் மறுபரிசீலனை வேண்டும்

-ஜெயலலிதா

(சென்னை)

புகையிரத வரவு-செலவுத் திட்டத்தில் உத்தேசப் பயண மற்றும் சரக்குக் கட்டண உயர்வுகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வலியுறுத்தியிருக்கிறார்.

பொருளாதார ஸ்திரத் தன்மைக்கும், மக்கள் நலனுக்கும் உகந்த வகையில் இந்தக் கட்டண உயர்வுகளை ரயில்வே அமைச்சர் மறுஆய்வு செய்ய வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார்.

சரக்குக் கட்டண உயர்வு பண வீக்கத்தை அதிகரிக்கும் என்றும், பொதுமக்களுக்குச் சுமையாக இருக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இதேவேளை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்மாநில செயற்குழு புகையிரதக் கட்டண உயர்வுகளைக் கண்டித்திருக்கிறது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயற்குழுவும் கட்டண உயர்வைக் கண்டித்திருக்கிறது.

### ஒத்துழைக்க முயற்சி

(டில்லி)

இந்தியாவுடன் இணைந்து பாதுகாப்புத்துறை பொருள்கள் சிலவற்றைத் தயாரிப்பதற்கு பிரிட்டன் முன் வந்துள்ளது இதற்காக தயாரிக்கப்படவுள்ள சில பொருள்கள் இனம் காணப்பட்டுள்ளன. இது தொடர்பாக பிரிட்டிஷ் பாதுகாப்பு இணை அமைச்சருடன் தற்போது இந்தியாவிற்கு வந்துள்ள தூதுக்குழுவிற்கும், பாதுகாப்பு அமைச்சர் சரத்பவாருக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

## சார்க் மாநாடு ஏப்ரலில்

ஏற்கனவே இரண்டு தடவைகள் ஒத்திப் போடப்பட்டுவிட்ட தென்னாசியநாடுகளின் ஒத்துழைப்பு மாநாட்டை - சார்க் உச்சி மாநாட்டை அடுத்த ஏப்ரல் மாதத்தில் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில்

## பெருமளவு கள்ளப்பணம் சோதனையில் கண்டுபிடிப்பு

தமிழ்நாட்டில் கணக்கில் காட்டப்படாத இரண்டு கோடியே பத்து லட்சம் ரூபாய் தனியார் தொழில் அதிபர் ஒருவரிடம் இருக்க கண்டுபிடிக்கப்பட்டதாக வருவாய்த்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

காமராஜர் மாவட்டம் அருப்புக்கோட்டைக்கு அருகே வருவாய்த்துறை புலனாய்வு பிரிவினரால் இது கண்டுபிடிக்கப்பட்டதாகவும். தனிநபர் ஒருவரிடமிருந்து இவ்வளவு பெரும் தொகை கைப்பற்றப்பட்டது நாட்டிலேயே இதுவே முதற்தடவை என்றும், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் சுமார் இருநூறு அதிகாரிகள் சோதனையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஒளிபரப்பு நேரமாற்றத்தை உடன் ரத்துச் செய்யவும்

- எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

(சென்னை)

தமிழ்நாடு சட்டப்பேரவையில் பிரதான கட்சியான இந்திரா காங்கிரஸ், பொறுப்புள்ளஎதிர்க்கட்சியாகச்செயற்படுமென்று சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

சென்னைத் தொலைக் காட்சியில் முக்கியமான ஒளிபரப்பு நேரத்தில் பதினைந்து நிமிடங்கள் குறைக்கப்பட்டிருப்பதை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் என்றும், மீண்டும் இரவு ஒன்பது மணி வரை தமிழில் ஒளிபரப்புத் தொடர வேண்டும் என்றும் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து மத்திய ஒளிபரப்புத்துறை இணை அமைச்சரை இருமுறை சந்தித்து வலியுறுத்தியதாகவும், தமது கோரிக்கையை பரிவுடன் பரிசீலிப்பதாக அமைச்சர் உறுதியளித்தார் என்றும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## நேரமாற்றத்தைக் கைவிட அ. தி. மு. க. கோரிக்கை

(டில்லி)

சென்னைத்தொலைக்காட்சியின் முதலாவது அலைவரிசையில் தேசிய நிகழ்ச்சிகள் முன்பு ஒளிபரப்பப்பட்ட அதேநேரத்திலேயே ஒளிபரப்பப்பட வேண்டுமென்றும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் புகுத்தப்பட்ட நேர மாற்றத்தைக் கைவிட வேண்டுமென்றும் மத்திய தகவல்துறை அமைச்சர் கே. பி. சிங்தேவிடம் அ. இ. அ. தி. மு. க எம்பிக்களின் தூதுக்குழு ஒன்று வலியுறுத்தியுள்ளது.

ஜி. சுவாமிநாதன், பி. ஜி. நாராயணன் ஆகியோர் தலைமையில் சென்ற இத்தூதுக்குழுவினர் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது தமது கோரிக்கை குறித்து சாதகமாகப் பரிசீலிப்பதாக அமைச்சர் இணக்கம் தெரிவித்ததாக குறிப்பிட்டனர்.

## இலங்கைத் தமிழர் ஒருவர் திருவான்மியூரில் கைது

(சென்னை)

சென்னையின் புறநகர் பகுதியான திருவான்மியூரில் இலங்கைப்பிரஜையானசண்முகவேல் என்பவர் இம்மாதம் இருபத்திநான்காம் திகதியன்று தமிழக உளவுத்துறையினரால் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் 1991 ஜனவரி 31-ம் திகதி முதல் தலைமறைவாக இருந்து வந்ததாகவும், திருவான்மியூருக்கு அருகே இரண்டு தொன் எடையுள்ள மாதிரிப்படகு ஒன்றை இவர் தயாரித்ததாகவும், அதனை மாமல்லபுரம் அருகே அவர் கொண்டு செல்ல முயன்றதாகவும், பதினெட்டு அடி நீளமுடைய இப்படகில் நவீன சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்ததாகவும், பொலீஸார் கூறினர். எனினும் 1991ல் குடியரசுத்தலைவர் ஆட்சி தமிழ்நாட்டில் பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இப்படகு கட்டும் பணி பூர்த்தி செய்யப்படவில்லை என்றும், இப்படகும் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் பொலீஸார் மேலும் கூறினர்.

## வீரவணக்கக் கூட்டம்

[வடமராட்சி]

வடமராட்சி வடக்கு கடற் புலிகள் பிரதேசத்தில் தமிழீழ மண்மீட்புக்காக இதுவரை காலமும் தை, மாசி மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 18 மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று சக்கோட்டை புனித சவேரியார் ஆலய முன்றலில் இரவு 7 மணிக்கு வடமராட்சி வடக்கு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. வரதன் தலைமையில் நடைபெறும்.

மற்றும் கடந்த வியாழக் கிழமை வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் செம்பியன்பற்று தெற்கு கிராமத்தில் வடமராட்சி கிழக்கு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சீர்மாறன் தலைமையில் நடைபெற்றது. பெண்கள் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் செல்வி மாலினி, வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, கடற்புலிகள் பிரமுகர் திரு. மறவன், கடற்புலிகளின் வடமராட்சிக் கோட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி பூரணி, திரு. அ. கா. அரியகுமார் மாஸ்ரர் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர் தொடர்ந்து வடமராட்சிகலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சியாக 'விலங்கு' நாடகமும் நடைபெற்றது.

(யோ)

## மகளிர் தின தெருக் கூத்து

(தொல்புரம்)

எதிர்வரும் அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் தெருக்கூத்து நிகழ்ச்சி நடாத்தப்படவுள்ளது.

மேற்படி நிகழ்ச்சி பங்குனி மாதம் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மகளிர் தினத்தையொட்டி சங்கானை வட்ட மகளிர் அமைப்பினால் கிராமங்கள் தோறும் நடாத்தப்படவுள்ளதென அமைப்பின் பொறுப்பாளர் செல்வி. அ. கஜாளினி தெரிவித்தார்.

மேலும் சங்கானை வட்டவைப் பிரதேசத்திலுள்ள முக்கிய சந்திகளில் சர்வதேச மகளிர்தினம் பற்றிய பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

( 36 )

## வருடாந்த கிரிக்கட் போட்டி யாழ். இந்து வெற்றி

(யாழ்ப்பாணம்)

நேற்றும், நேற்றுமுன்தினமும் பரபரப்பாக இடம்பெற்ற யாழ். இந்துக் கல்லூரி, யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி வருடாந்த கிரிக்கட் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி 2 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

சென்ஜோன்ஸ் கல்லூரி முதல் இனிங்ஸ் 214 ஓட்டங்கள் 2-ம் இனிங்ஸ் 185 ஓட்டங்கள். யாழ். இந்துக் கல்லூரி முதலாவது இனிங்ஸ் 287 ஓட்டங்கள் இரண்டாவது இனிங்ஸ் 8விக்கட் இழப்பிற்கு 113 ஓட்டங்கள்.

யாழ். இந்துக்கல்லூரி வீரர் திருக்குமார் முதலாவது இனிங்ஸில் 100 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கால்நடை வளர்ப்போர் கூட்டம்

(வடமராட்சி)

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு கால் நடை வளர்ப்போருக்கான கூட்டம் நடைபெறும்.

(யோ)

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா இலெட்சுமி

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கோண்டாவில் கிழக்கில் [இருபாலைவீதி] வசிப்பவருமாகிய தம்பையா இலெட்சுமி அம்மையார் நேற்று [27-02-93] காலமாகிவிட்டார். அன்னார் சோமு தம்பையாவின் அன்பு மனைவியும், சிவராசா [குப்பிளான்], தேவராசா, வளர்மதி ஆகியோரின் அன்புத் தாயாரும், விஸ்வப்பிரம்மகுல கந்தையா -சின்னத்தங்கம் ஆகியவர்களின் அருமை மகளும், காலஞ்சென்ற விஸ்வப் பிரம்ம குல சோமு - நாயகம் இவர்களின் அன்பு மருமகளும், இராசம்மா, காலஞ் சென்ற சிவக்கொழுந்து, பூரணம், செல்லத்துரை, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் குமரேசு, காசிப்பிள்ளை, இராமலிங்கம், காலஞ் சென்ற சின்னாச்சி, கற்பகம், பாறுவதி, நாகம்மா ஆகியோரின் மைத்துனியும், செல்வராணி [முள்ளியவளை], பாரதி [திருநெல்வேலி], இராசலிங்கம் ஆகியோரின் மாமியாரும், சிவச்செல்வன், சிவராஜி, சிவஸ்ரீஸ்சன், சிவபாலா, சிவராஜரூபினி, சிவஜீவன், சிவஜித்ரகன், பார்தீபா, ஸ்ரீவாசுகி, ஸ்ரீவித்தியா, ஸ்ரீமித்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று [28-02-93] காலை 10.00 மணிக்கு கோண்டாவில் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சோமு - தம்பையா [ஆசாரி]
கணவன்

(4362)

திருமதி

### இராசம்மா முருகேச ஐயர்

திருமதி இராசமமா முருகேச ஐயர் கடந்த செவ்வாயன்று சிலாபத்தில் காலமானார். ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்னார் காலஞ்சென்ற முருகேச ஐயர் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி காமாட்சிஅம்பிகை கந்தசாமி ஐயர், தியாகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி ஐயர், திருமதி கருணாகடாட்ஷி தியாகராசா (பாப்பா) ஆகியோரின் அன்பு மாமியும், சுந்தரராஜன், பாலநடராசன், திருமதி கமலா குகதாஸ், திருமதி ஹேமா கமலநாதன், ராதா, லோசனா, பிரபா, திருமதி தேன்மொழி வாமதேவக் குருக்கள், திருமதி ஜெயந்தி விஜயகுமாரக் குருக்கள், முருகானந்தன், ஞானானந்தன், வித்தியானந்தன், கருணானந்தன், தயானந்தன், ஜெயானந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பஷ்யந்திகா, கைலாசநாதன், கைலாசராஜன், கைலாசவிஜய், கைலாசபானு, காயத்திரி, மைத்திரேயி, ரிஷாங்கன், ஷோபனா, திவ்யா, துவாரகன், மதுரா, செளம்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

தகவல்:
ந. கந்தசாமி ஐயர்
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(சி-6107)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

நியூயோர்க் வர்த்தகமைய

# 110 மாடிக் கட்டடத்தி[ல்] கார்க்குண்டு வெடிப்[பு]

## 7 பேர் பலி; 600 பேர் பருக[ம்]

[லண்டன்]

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருக்கும் உலகவர்த்தக மையம் ஒன்றில் நேற்றுமுன்தினம் குண்டுவெடிப்பு ஏற்பட்டதில் ஏழுபேர்கொல்லப்பட்டனர். 600பேர்படுகாயமடைந்தனர். கார்கள் நிறுத்தி வைக்கப்படும் நிலத்தடிமையம்ஒன்றில் இக்குண்டுவெடிப்பு நேரிட்டதால் அருகிலிருந்த ரயில்நிலையம் இடிந்து விழுந்தது 110 மாடிகளைக்கொண்ட அந்த வர்த்தக மையத்திலிருந்து அடர்ந்த கரும்புகை மூண்டதைக் காணக்கூடியதாக இருந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் பி. பி. ஸி. நிருபரிடம் கூறியுள்ளனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு மூண்டுள்ள பெரும் தீயில் சிக்கிக் கொண்டதாகவும், மீட்புப்பணியில் ஹெலிக்கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள்தெரிவிக்கின்றன.

400 தொடக்கம் 1000இறாத்தல் நிறையுடைய பிளாஸ்டிக் குண்டுகள் வெ[...] கப்பட்டிருக்கலாமெ[...] கப்படுகிறது.

பொஸ்னியாமீ[...] விமானங்கள் மூல[...] பொருள்களைப் [...] அமெரிக்க ஜனா[...] கிளிண்டன் முடி[...] மைக்கு எதிர்ப்பு[...] சேர்பிய விடுதல[...] இக்குண்டுத் தா[...] மேற்கொண்டி[...] அமெரிக்க பொ[...] விக்கின்றனர்.

இத்தாக்குதலை[...] யோர்க் விமான [...] றும் கேந்திர [...] பாதுகாப்பு பல[...] டுள்ளதாக [...] படுகிறது.

## உதைபந்தாட்ட கழகங்[கள்] பதிவு செய்யக் கோரி[க்கை]

(யாழ்ப்பாணம்)

இதுவரை யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையில் பதிவு செய்யப்படாத யாழ். மாவட்டத்திலுள்ள உதைபந்தாட்டக் குழுக்கள் உள்ள கழகங்கள் 18-03-93 க்கு முன்னர் தங்கள் பதிவுகளை பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பப் படிவங்களை அவ்வப்பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர்களிடமும், கோட்[...] நியமிக்கப்பட்ட [...] டமும் பெற்றுக்[...]

தென்மராட்சி[...] தினர் திரு. வே[...] கம் அவர்களிட[...] வில் மகாவித்திய[...] கக் கோட்டத்தி[...] சண்முகநாதன் [...] கந்தர்மடம்) பெ[...] ளலாம் என ய[...] விளையாட்டு [...] குழுவினர் தெரிவி[...]

## 'சிரித்திரன்' வெளிவந்துள்ளது

தை, மாசி மாதங்களுக்குரிய சிரித்திரன் இதழ் வெளிவந்துள்ளது. இவ் இதழில் து. வைத்திலிங்கம் எழுதியுள்ள மரத்தடி மகாராஜாக்கள், வளவை வளவன்எழுதியுள்ள தலைவர்கள் ஆகிய சிறுகதைகளும், இசையும், நடிப்பும் இணைந்த சாந்தனின் ஆளுமை பற்றிய நவாலியூர் நடேசனின் குறிப்பு என்பவற்றுடன் வழமையான முன்முறுவல், பின்சிரிப்பு மற்றும் மகுடி பதில்களும் இடம் பெற்றுள்ளன.

## வருடாந்த உற்சவம்

[நெல்லியடி]

புலோலி கிழக்கு சந்தாதோட்டம் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி (முதலி) அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

[30]

## திட்டப்

நாதன் கொழும்பு அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருந்தமை தெரிந்ததே. இம் மகஜரைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருப்பதாகவும் உரிய நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளரிடமிருந்து யாழ். செயலகத்துக்கு பதில் கடிதம் ஒன்று கிடைத்துள்ளது.

இதனால் குடாநாட்டில் தற்போது நிலவிவரும் உணவுப் பற்றாக்குறையை ஓரளவுக்கேனும் தீர்த்து வைக்க முடியும் என்று யாழ். செயலக அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவில் இருந்து வெளியாகும் அறிவிப்புக்கள் நடைமுறைக்கு வரும் பட்சத்தில்மேற்படி நம்பிக்கைஅர்த்தமுடையதாக அமையும் என்றும் கூறப்பட்டுள்ளது. (க)

## காசநோய்

வருடம் காசநோயாளர் தொகை யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. 1991 இல் இந்நோயினால் 254 பேர் பாதிக்கப்பட்டனர் என்றும் கடந்த வருடம் 362 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வாழ்த்துகின்றோ[ம்]

இன்னிசை வேந்தன்

திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்[...] பாராட்டு விழா சிறக்கவும் சீரும் சிற[...] பல்லாண்டுகள் வாழ வாழ்த்தும்.

(கரன்) குண்டுமணி மாஸ்ரர் கு[...]

## உள்வந்த வெளிச்செல்[லும்] வாகன இலக்கங்கள் 27-02-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:-8421

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

28-912, 26-7627, 26-8223, 28-6640 4[...]
28-1706, 26-6933, 41-9652, 26-7525, 2[...]
42-1320, 24-523, 41-8035, 26-3528,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்

41-8291, 27-2034, 26-4727, 24-6161, 26[...]
28-6748, 41-6933, 24-6431, 24-5241, 26[...]
26-2737, 26-989, 26-2299, 24-4103, 42-[...]

## மரண அறிவித்தல்

### கந்தவனம் செல்லத்துரை

மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட[...]வும், சுதுமலை வடக்கு மதவடி ஒழுங்கையை வசி[...] மாகவும் கொண்ட கந்தவனம் செல்லத்துரை 27-0[...] நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற செல்[...]யின் அன்புக் கணவரும், புண்ணியமூர்த்தி, கி[...] மூர்த்தி, ஏகாம்பரம், பகவதிதேவி, சேதுராசா ஆகி[...]ரின் அன்பு தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28-2-93) பகல் 1 மணியளவில் நடைபெற்று தாவடி மய[...] தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை [...]றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்[...]ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
பொ. கணே[...]
(மருமக[...])

மதவடி ஒழுங்கை,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(4366)